## இறுதிச் செபம்:



மீட்பராகிய இயேசுவே, எங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் பொறுப்பெடுத்துக்கொள்ளவும் எங்களுக்கென ஒரு குடும்பத்தைத் தந்துள்ளீர். நாங்கள் சோர்ந்துபோகும் நேரங்களில் எங்கள் நம்பிக்கையைப் புதுப்பித்துக்கொள்ளவும், எங்கள் இதயங்களின் போராட்டங்களைப் புரிந்துகொள்ளவும், எங்கள் இதயங்களை உமது அன்பிலும் அமைதியிலும் வைத்தருளும். இவையாவும் உம்பெயரால் மன்றாடுகிறோம். ஆமென்.

## முடிவு பாடல்:

அன்பு செய்யுங்கள் - 4 (2)
நான் அன்பு செய்ததுபோல அன்பு செய்யுங்கள் -2
புனிதமான புதிய கட்டளை அன்பு செய்யுங்கள் - 2

சாதி சமய வெறிகள் மறைய...
அன்பு செய்யுங்கள் -2
மனித நேயம் மண்ணில் மலர...
அன்பு செய்யுங்கள் -2

குடும்ப வாழ்வில் ஒன்றி மகிழ...
அன்பு செய்யுங்கள் -2
புதிய வாழ்வை உலகில் வழங்க...
அன்பு செய்யுங்கள் -2

**Published by:**
Peninsular Malaysia
Pastoral Team

**Email:**
api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

ஏப்ரல் 2025

# அதிசசிந்தனை

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

### மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

# குடும்பம்

## சவால்களை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு துணையாக இருக்க அழைப்பு

ஒரு குடும்பம் என்பது ஒரு தலத்திருஅவை, அது கிறிஸ்துவின் உடனிருப்பின் ஆற்றலை மற்றவர்களிடம் வெளிப்படுத்துகிறது. ஆயர்மாமன்றத்தின் குணங்கள் முதலில் குடும்பத்தில் தான் வாழ்கிறது.



Image: www.youtube.com/watch?v=M_Q9oy_IJEA

## தொடக்கச் செபம்:

தந்தையே, எங்கள் குழந்தைகள் உம்மை நோக்கிப் பயணிக்கவும் அதற்காக அவர்களைப் பயிற்றுவிக்கவும் பெற்றோர்களாக எங்களுக்கு வாய்ப்பளித்ததற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். தாழ்ச்சி மற்றும் மென்மை என்னும் குணத்தை எங்களுக்கு வழங்கி, நாங்கள் அன்பான பொறுமையான பெற்றோராக இருக்கும் புதிய மனப்பான்மையை எங்களுக்குத் தாரும். நாங்கள் எங்கள் குழந்தைகள் மீது வைத்திருக்கும் பிம்பத்தை அகற்றி, நீரே அவர்களை வடிவமைத்தீர் என்பதைப் பார்க்க எங்களுக்கு உதவியருளும். இவையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## தொடக்கப்பாடல்:

என்னைத் தந்தேன் எல்லாம் தந்தேன்
என் வாழ்வைப் பலியாக்கவே
உள்ளம் தந்தேன் உமக்கே தந்தேன்
பிறரன்பு பணி செய்யவே
என் யேசுவே என் ஜீவனே
உம்மோடு உறவாடவே (2)

1. புகழோடு நான் வாழவில்லை உம்
புகழொன்றே எனக்குப் போதும்
அருள் வாழ்வினில் நான் வளர – உம்
அன்பொன்று எனக்குப் போதும்
உயர்வோடும் தாழ்வோடும் வாழும்போதும் – உம்
உறவொன்று எனக்குப் போதும்
மகிழ்வோடும் துயரோடும் வாழும்போதும் – உம்
கரமொன்றே எனைத் தேற்றிடும்

2. அயலாரிலே உம்மைக் காண
என்னை நான் பலியாக்கினேன்
ஆண்டவரே உம்மை அடைய
என்னை நான் தியாகம் செய்தேன்
உம் சித்தம் நாளும் நிறைவேற்றிட
என்னை நான் அர்ப்பணித்தேன்
நற்செய்தி பணியை நாளும் செய்ய
நாதனே என்னைத் தந்தேன்

## உரையாடல்

அருள்பணி மிட்செல் ஜோசப் மற்றும் ரீத்தா கிருஷ்ணன் ஆகியோருக்கு இடையேயான நேர்காணல்:



ரீகி: இன்றைய கத்தோலிக்க குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன தந்தையே,

அருள்பணி மிஜோ: இன்று தொழில்நுட்பமும் சமூக கலாச்சாரமும் குடும்பங்களில் அதிகமான பிரச்னைகள் உருவாக காரணமாகின்றன. ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் பிரிக்கப்பட்டுள்ளனர். ஆழமான உரையாடல்கள் மற்றும் தொடர்புகளுக்குப் பதிலாக அந்த இடங்களைத் சமூகத் தொலைத்தொடர்பு சாதனங்கள் பிடித்துகொண்டுள்ளன. மறுபுறம் குடும்பங்கள் நம்பிக்கையில் தொடர்ந்து வளரவும், தொடர்பில் இருக்கவும் அதே தொழிநுட்பங்கள் வாய்ப்புகளை வழங்கமுடியும் என்று நான் நம்புகிறேன். விவிலியத்தை வாசிக்கவும், ஜெபமாலை ஜெபிக்கவும் தொலைத் தொடர்புகளைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் உரையாடுவதன் மூலம் குடும்பங்களில் உள்ள பிணைப்புகளை வலுப்படுத்தலாம்.

ரீகி: மின்னியல் கலாச்சாரம் குடும்பங்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா தந்தையே?

அருள்பணி மிஜோ: பொருத்தமற்ற கருத்துகள், மற்றும் தகவல்கள் குழந்தைகளுக்கு

அறிமுகப்படுத்தப்படுவதால் அதிக ஆபத்துகள் உள்ளன என்பதை பெற்றோர்கள் உணரவேண்டும். தொழில்நுட்பத்தின் நேர்மைறையான பயன்பாடு பற்றிய உரையாடல்களைத் தொடங்கவும், சமூக ஊடகங்களுடன் தொடர்புடைய ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குறிப்பாக, உணவின்போது அல்லது உறங்குவதற்கு முன் மின்னியல் சாதனங்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற தெளிவான வரம்புகளை நிர்ணயிப்பதன்மூலம் அவர்களிடையே ஆரோக்கியமான வரையறைகளை ஏற்படுத்த வேண்டும். இது குடும்ப உறுப்பினர்களிடையே குடும்ப ஒன்றுகூடலின் நேரத்தையும் உரையாடலின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

ரீகி: தந்தையே, மின்னியல் சாதனங்களின் ஆபத்துகளிலிருந்து தங்கள் குழந்தைகளைப் பாதுகாத்திட பெற்றோருக்கு உங்களின் அறிவுரை என்ன?

அருள்பணி மிஜோ: கிறிஸ்துவ அன்பு, திருஅவையின் பாரம்பரியம் ஆகியவற்றில்

வேரூன்றிய கத்தோலிக்க கண்ணோட்டத்தில் அமைந்துள்ள மின்னியல் தளங்கள் பல உள்ளன. அவை இறைவேண்டல் முதல் கத்தோலிக்க கல்வி வரை உள்ளடக்கிய நடைமுறைக் கருவிகள் பல உள்ளன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் சரியான தளங்களைத் தேர்ந்தெடுக்க வழிகாட்ட வேண்டும். அதே வேளையில் மின்னியல் சாதனங்களின் ஆபத்துகளைப் புரிந்துகொள்ளவும் சிந்திக்கவும் உதவவேண்டும்.

இறுதியாக, பெற்றோர்கள் தான், தங்கள் குழந்தைகளின் நம்பிக்கையின் முதல் ஆசிரியர்கள். மேலும் அவர்களின் முன்மாதிரியான வாழ்க்கை குழந்தைகளின் ஆன்மீக உருவாக்கத்திற்கு மிகவும் வலுவான காரணியாகும். குழந்தைகள் தாங்கள் பார்ப்பதிலிருந்து கற்றுக் கொள்கிறார்கள். மேலும் குழந்தைகள், தங்களுடைய மின்னியல் சாதனங்களை ஒதுக்கி வைத்து, அவற்றுக்கு அடிமைகளாக இல்லாமல் தங்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து வாழ்ந்து, திருப்பலியில் கலந்து கொண்டு தொடர்ந்து இறைவேண்டல் செய்தாலே, அவர்களின் இந்தப் போராட்டத்தில் பாதிக்குமேல் வெற்றி பெற்றவர்களாகி விடுவார்கள்.

உங்கள் எண்ணங்களை உங்கள் அதிச உறுப்பினர்களோடுப் பகிர்ந்து கொள்ளுங்கள்

- இன்றைய குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய, உங்கள் எண்ணங்களை ஒருவர் மற்றவரோடுப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- குடும்பங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும், நம்பிக்கையில் வளரவும், தேவையான வழிகளைப் பட்டியலிடவும்.
- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## இறைவார்த்தை

### கொலோசையர் 3: 12,14

நீங்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே, அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை, ஆகிய பண்புகளால் உங்களை அணிசெய்யுங்கள். ... இவையனைத்துக்கும் மேலாக, அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவையனைத்தையும் பிணைத்து நிறைவுபெறச் செய்யும்.

### தனிப்பட்ட சிந்தனைக்கு:

- இறைவார்த்தையை வாசித்து, தூய ஆவியாரிடம் ஞானத்தைக் கேளுங்கள்
- எதேனும் ஒரு வார்த்தை அல்லது வசனம் உங்கள் உள்ளத்தை தொட்டதா?
- தூய ஆவியார் உங்களைத் தூண்டியதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்

### செயல் நடவடிக்கை:

- உங்கள் உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது சொற்றொடரின் வழியாக ஆண்டவர் உங்களோடு என்ன பேசுகிறார் என்பதை 3-4 பேர் கொண்ட குழுவில் பகிர்ந்துகொள்ளுங்கள்.

### செயல்நடவடிக்கை:

- ஒருவருக்கொருவர் இறைவேண்டல் செய்யவும், குடும்பமாக ஒன்றித்து வளரவும், யூபிலி திருப்பயணத்திற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலயத்திற்கு குடும்பமாக எதிர்நோக்கின் திருப்பயணிகளாக பயணம் மேற்கொள்ளுங்கள்.

(ஆதாரம்: அருள்பணி மிட்செல் ஜோசப் அவர்களின் நேர்காணலில் இருந்து)